**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : DVC.39/2019 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : PW2 | Village: | |
| Name | : கஜினிமுகமது | Age | :62 |
| Father's/Husband's Name | : ஷாலி | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 25.09.2024**

**<u>முதல் விசாரணை</u>:**

நான் தற்போது திருவிடைமருதூர் தாலுக்கா ஆவணியாபுரம் மொகைதீன் ஆண்டவர் பள்ளிவாசலில் கடந்த 2 வருடங்களாக தலைமை பொறுப்பில் நாட்டாமையாக இருந்து வருகிறேன். எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிக்கா அனுமதி கடிதம் மற்றும் திருமண பதிவேட்டினை எடுத்து வந்துள்ளேன். மேற்படி திருமண பதிவேடு பக்கம் 24 ல் அப்துல்ரகீம் குமாரர் ஜாகிர்உசேன் என்பவருக்கும் பரித்பாவா என்பவரின் மகள் பாத்திமாஜின்னா என்பவருக்கும் 25.07.1993 நடைபெற்ற திருமணம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் பெண் வீட்டார் பெண்ணுக்கு 35 பவுன் நகை போட்டதாகவும் மற்றும் தொகை ரூ.70,000/-மும் கொடுத்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களின் அசல் எங்களின் பள்ளிவாசலின் அன்றாட பணிக்கு தேவைப்படுவதால் அதன் உண்மை நகலை தாக்கல்

செய்கிறேன். ( நிக்கா அனுமதி கடிதம் உண்மை நகல் சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது) ( திருமண ஒப்பந்த பதிவு பத்திரம் உண்மை நகல் சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. அந்த அழைப்பாணையில் நீதிமன்றத்தில் நேரடியாக ஆஜராக வேண்டும் என்று குறிப்பிடப்பட்டதா என்றால் சரிதான். ஆவணங்களை எடுத்து வர வேண்டும் என்று அழைப்பாணையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை யார் எடுத்து வர சொன்னது என்றால் அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள பாத்திமாஜின்னா என்பவரை கண்டுபிடித்து நான் விசாரித்தபோது அவர் வழக்கு பற்றி கூறி திருமண பதிவேட்டினை எடுத்து வர சொன்னதால் எடுத்து வந்துள்ளேன். சா.சா.ஆ.2 ஆவணத்தில் நெட்டெழுத்து பூர்த்தி செய்தது உள்பட என்ற இடத்தில் கையொப்பம் எதுவும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். . பொதுவாக அந்த இடத்தில் கையொப்பம் செய்யப்படுவதில்லை. பொதுவாக சா.சா.ஆ.2 ஆவணத்தை நிரப்புவர்கள் கையொப்பம் செய்யப்படவேண்டும் என்பதற்காகதான் நெட்டெழுத்து பூர்த்தி செய்தது உள்பட என்ற காலம் உள்ளது என்றால் சரிதான். சா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மகர் தொகை ரூ.1,001/-ஐ ஜமாத்தார்கள் முன்னிலையில்தான் மணமகன் மணமகளுக்கு கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். பெண் வீட்டாருக்கு நகைகள் போடப்பட்டது குறித்து ஜமாத்தார்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அது பெண் வீட்டாரும் மாப்பிள்ளை வீட்டாரும் பேசிக் கொள்வார்கள். நாங்கள் அவர்கள் பேசிக்கொண்டதை ஊர்ஜிதம் செய்து கொண்டு திருமண பதிவேட்டில் பதிவு செய்வோம். மகர் கொடுப்பதைபோல பெண் வீட்டார் நகைகள் மற்றும் சீதனம் கொடுப்பதை நாங்கள்

நேரடியாக பார்க்க மாட்டோம் என்றால் சரிதான். நான் தற்போது பள்ளிவாசலில் நிர்வாக தலைமையாக இருந்து வருகிறேன். அதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சீதனம் ரூ.70,000/- பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நகைகள் மற்றும் சீதனம் பற்றி யார் சொல்வார்கள் என்றால் பெண்ணின் தகப்பனார் சாட்சிகளின் முன்னிலையில் சொல்வார் அதனை நாங்கள் பதிவு செய்வோம். மேற்படி திருமணத்தின்போது யார் நாட்டாமையாக இருந்தது என்றால் நான்தான் இருந்தேன். சா.சா.ஆ.1 ஆவணத்தில் எங்கள் பள்ளிவாசலை சேர்ந்தவர்கள் யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ளதுபோல பெண் வீட்டார் 35 பவுன் நகைகள் போட்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2024.09.26 16:50:10 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**